


# யூதா நிருபம்

குறிப்புகள்

## விசுவாசத்திற்காக தைரியமாய் போராடு


சகோ. R. ஜோஸ்

கன்னியாகுமரி

கிறிஸ்துவின் சபை

# யுதா

**யுதா புத்தகத்தின் புறக்குறிப்பு:**
**மைய கருத்து: விசுவாசத்திற்காக தைரியமாய் போராடு (1:3)**
**ஆசிரியர் : யுதா (1:1)**

- **வாழ்த்து (1–2)**
- **விசுவாசத்திற்காகப் போராடுங்கள் (3–4)**
- **கள்ளப் போதகர்கள் மீதான நியாயத்தீர்ப்பு (5–16)**
    - நியாயத்தீர்ப்பின் உதாரணங்கள்
    - கள்ளப் போதகர்களின் குணாதிசயம்
    - நியாயத்தீர்ப்பின் நிச்சயம்
- **விசுவாசிகளுக்கான அறிவுரைகள் (17–23)**
    - நினைவுகூர்க
    - கட்டுங்கள்
    - ஜெபியுங்கள்
    - காத்திருங்கள்
    - மீட்பு
- **தேவனுக்குத் துதி (24–25)**
- **யூதாவில் உள்ள முக்கிய வார்த்தைகள்**
    - அழைக்கப்பட்டவர்
    - காக்கப்பட்டவர்
    - பிரியமானவர்
    - விசுவாசம்
    - அநீதியுள்ளவர்
    - நியாயத்தீர்ப்பு
    - இரக்கம்
    - கட்டுங்கள்
    - ஜெபியுங்கள்
    - காத்திருங்கள்
    - மீட்பு
    - மகிமை

1. **இயேசுகிறிஸ்துவினுடைய ஊழியக்காரனும், யாக்கோபினுடைய சகோதரனுமாயிருக்கிற யூதா, பிதாவாகிய தேவனாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களும், இயேசுகிறிஸ்துவினாலே காக்கப்பட்டவர்களுமாகிய அழைக்கப்பட்டவர்களுக்கு எழுதுகிறதாவது:**
2. **உங்களுக்கு இரக்கமும் சமாதானமும் அன்பும் பெருகக்கடவது.**

.அ. இந்த நிருபத்தை எழுதியவர் யாருடைய சகோதரன்? யாக்கோபின் சகோதரன் (மத் 13:55).

ஆ. யாருக்கு எழுதப்பட்டது?

1. **"பிதாவினால் பரிசுத்தமாக்கப்பட்டவர்கள"**– இயேசுவின் இரத்தமே நம்மை பரிசுத்தமாக்கும் (1 யோவா1:7). அவரை தந்து பிதாவாகிய தேவன் நம்மை சுத்திகரித்துள்ளார். (கொலே 1:12,13 1 பேது 1:2 1 கொரி 6:10,11)

2. **"இயேசுவினால் காக்கப்பட்டவர்கள"** – இந்த பொல்லாத பிரபஞ்சத்திலிருந்து(உலகத்திலிருந்து) காக்கப்பட்டிருக்கிறோம். (கலா 1:4).பொருள்களை கெட்டுப்போகாமல் இருக்க செய்வது போல நாமும் காக்கப்பட்டிருக்கிறோம். இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தினால் காக்கப்பட்டிருக்கிறோம்.(1 பேது 1:5). அவரே நம்முடைய இரட்சகர் ( 2 பேதுரு 1:1). அவரே ஜீவன் அவராலே ஜீவன் உண்தாயிருக்கிறது. (2தீமோ1:1 கலா 2:20). அவரே நம்முடைய நம்பிக்கை (1தீமோ1:1).

**குறிப்பு:** கிறிஸ்துவுக்குள் இருப்பதால் ஒருவர் கெட்டுப்போவது இல்லை, நாம் இயேசுவுக்காக காக்கப்பட்டிருக்கிறோம். (2 கொரி5:15, ரோம 6:10)

இ. நமக்கு எது பெருக வேண்டும்? இரக்கம், சமதானம், அன்பு

**3. பிரியமானவர்களே, பொதுவான இரட்சிப்பைக்குறித்து உங்களுக்கு எழுதும்படி நான் மிகவும் கருத்துள்ளவனாயிருக்கையில், பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காக நீங்கள் தைரியமாய்ப் போராடவேண்டுமென்று உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு அவசியமாய்க் கண்டது.**

அ. இந்த நிருபம் எழுதப்பட்டதற்கான காரணம் (வச 3)

ஆ. **“பொதுவான இரட்சிப்பு”** – நம்முடைய விசுவாசத்தை வளர செய்வதே நோக்கமாய் இருக்கிறது. நமக்கு கிடைத்த மிகப்பெரிய இரட்சிப்பை குறித்து நாம் அக்கறையில்லாதவர்களாய் இராமல் , அதை குறித்து மிகவும் ஜாக்கிரத்தையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். (2 பேதுரு 1:10, பிலி2:12, எபி 2:4).

> **கருத்து:** ஒருவர் ஞானஸ்நானம் எடுப்பதால் மாத்திரம் பரலோகம் செல்ல முடியாது. அவர் தன்னுடைய வெண் வஸ்திரம்(இரட்சிப்பு) கறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அதற்காக அவர் போராட வேண்டும். (வெளி 19:8, வெளி 7:14 மத் 22:12 எசா 61:10)

இ. **“ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட”**- இயேசுவினால் அப்போஸ்தலர்கள் மூலம் பரிசுத்தவான்களுக்கு (கிறிஸ்தவர்கள்) கொடுக்கப்பட்ட சுவிசே‘ம். ஒன்றுதான், இந்த சுவிசே‘த்தினாலே நாம் விசுவாசத்தை பெற்றுள்ளோம். கள்ள உபதேசம் அநேகம் இருந்தாலும் உண்மையான சத்தியத்திற்காக போராட வேண்டும். (அப் 16:4,5 இகலா 1:6-9 பிலி 1:27)

ஈ. **“விசுவாசத்திற்காக தைரியமாய் போராடுங்கள்”** – இதை சண்டை போடு எனவும் கூறலாம். நாம் கிறிஸ்தவின் போர்சேவகர்களாய் இருக்கிறோம். (2தீமோ 2:2). விசுவாசத்தில் நின்று விசுவாசத்திற்காக போராட வேண்டும் (1 தீமோ 6:12). சாத்தானுக்கு விரோதமான இந்த போராட்டத்தில் அவன் இந்த உலகத்திலிருக்கிற எல்லாவற்றையும் ஆயுதமாக பயன்படுத்துகிறான். (எபே 6:11,12). நாம் நமக்கு ஒப்புவிக்கப்பட்டுள்ள சுவிசே‘த்தினாலே விசுவாசத்திற்காக போராட வேண்டும்.(பிலி 1:27). நாம் ஏமாற்றப்படும் வாய்ப்புயிருக்கிறது , அதனால் கவனமாய் இருக்க வேண்டும் (கலா6:7, கொலே 2:4,19, 1 தீமோ4:1).

**ஏனெனில் நமது தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டி, ஒன்றான ஆண்டவராகிய தேவனையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் மறுதலிக்கிற பக்தியற்றவர்களாகிய சிலர் பக்க வழியாய் நுழைந்திருக்கிறார்கள் அவர்கள் இந்த ஆக்கினைக்குள்ளாவார்களென்று பூர்வத்திலே எழுதியிருக்கிறது.**

அ. **“கிருபையை காமவிகாரத்துக்குக்கேதுவாக புரட்டி”**- தேவனுடைய கிருபையினால் இரட்சிக்கப்பட்டு, தேவனுடைய பிள்ளைகளாய் வாழ, மாற நமக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. (எபே2:6-8, ரோம 5:15,17). இந்த கிருபையை கள்ள போதகர்கள் தங்களுக்காக புரட்டி கொள்கிறார்கள். அவர்கள் மக்களை ஆதாயப்படுத்தி கொள்ள மனிதனுடைய சிற்றின்பகுதியை தூண்டுகிறார்கள். சுகமான வாழ்க்கையை கொடுப்பதினால் இதை செய்கிறார்கள்.

ஆ. **“கிறிஸ்துவை மறுதலிக்கிறவர்கள்”**- இயேசவை மறுதலிக்கிறவர்கள் தேவனையும் மறுதலிக்கிறார்கள் (யோவா 14:6, யோவா 14:23). இப்படிப்பட்டவர்களே அந்திக்கிறிஸ்துவாக இருக்கிறார்கள் ( 1யோவா 2:22,23). இவர்கள் இயேசுவின் மூலமாய் வராமல் பக்க வழியாய் வருகிறார்கள் ஆகவே இவர்கள் கள்ளரும், கொள்ளைக்காரருமாயிருக்கிறார்கள். (யோவா 10:1,2,9 கலா 2:4)

1. வார்த்தையினால் மாத்திரம் தானா கிறிஸ்துவை மறுதலிக்க முடியும்?(தீத்து 1:16).

## 5.நீங்கள் முன்னமே அறிந்திருந்தாலும், நான் உங்களுக்கு நினைப்பூட்ட விரும்புகிறதென்னவெனில், கர்த்தர் தமது ஜனத்தை எகிப்துதேசத்திலிருந்து வரப்பண்ணி இரட்சித்து, பின்பு விசுவாசியாதவர்களை அழித்தார்.

அ. **“எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணி இரட்சித்து”**- தேவன் தன்னுடைய ஜனங்கள் எகிப்து தேசத்தில் அடிமையாயிருப்பதை பார்த்து அவர்களை அந்த அடிமைதனத்திலிருந்து விடுதலை கொடுக்க விரும்பினார். 10 வாதைகளை எகிப்து ஜனங்கள் மீது வர வைத்து (யாத் 7-12). இஸ்ரவேல் ஜனங்களை விடுதலையாக்கி எகிப்து தேசத்திலிருந்து வெளியே கொண்டு வந்தார் (யாத் 12:41 உபா 6:12) இதை போல தான் நாமும் இயேசுவினால் பாவத்திலிருந்து வெளியே கொண்டு வரப்பட்டுள்ளோம். பின்பு 40 வருடம் வனாத்திரத்தில் அழைத்து வந்து விசுவாசியாதவர்களை அழித்தும் வந்தார். (உபா 8:2).

ஆ. தேவன் எவ்வளவு நன்மைகளையும், அதிசயங்களையும் அவர்களுடைய வாழ்க்கையில் செய்தாலும் இஸ்ரவேல் ஜனங்கள் அவிசுவாசத்தினாலே தேவனை விட்டு பின்வாங்க பார்த்தனர் (உபா1:26, 27,28-33 1 கொரி10:5 எண்11:4-6 யாத் 16:3 அப் 7:39). அதினாலே தேவன் அவர்களை அழிந்தார். அவர்களை போல நாமும் நம்முடைய வாழக்கையில் தேவனை விட்டு பின்வாங்குகிறாவர்களாய் இருந்து தேவனால் அழிக்கப்படுகிறவர்களாய் இருக்க கூடாது.

## 6.தங்களுடைய ஆதிமேன்மையைக் காத்துக்கொள்ளாமல், தங்களுக்குரிய வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களையும், மகாநாளின் நியாயத்தீர்ப்புக்கென்று நித்திய சங்கிலிகளினாலே கட்டி, அந்தகாரத்தில் அடைத்துவைத்திருக்கிறார்.

ஆ .தேவன் வாசஸ்தலத்தை விட்டுவிட்ட தூதர்களை என்ன செய்தார்? பார்க்கவும் (2 பேது 2:4) அவர்கள் பாவம் செய்ததால் தங்களுடைய ஆதி மேன்மையை இழந்தனர்.

ஆ. இந்த செய்தியின் மூலமாய் நாம் கற்றுக்கொள்ளும் பாடம் என்ன? தூதர்கள் தேவன் கொடுத்த மேன்மையை இழந்தனர். தேவன் நமக்கு கொடுத்த மேன்மையான காரியங்களை குறித்து (இரட்சிப்பு) அதை இழந்து போகாமல் இருக்கும் படி அதை காத்துக்கொள்ள வேண்டும். அதற்கு நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் (எபி 10:38)

**7.அப்படியே சோதோம் கொமோரா பட்டணத்தார்களும், அவைகளைச் சூழ்ந்த பட்டணத்தார்களும், அவர்களைப்போல் விபசாரம்பண்ணி, அந்நிய மாம்சத்தைத் தொடர்ந்து, நித்திய அக்கினியின் ஆக்கினையை அடைந்து, திருஂ'டாந்தமாக வைக்கப்பட்டிருக்கிறார்கள்.**

அ. **"சோதோம் கொமோரா"**- இவர்களுடைய பாவம் மிகவும் மோசமானதாக இருந்தது. (ஆதி 18:20 ஆதி 13:13 ஆதி 19:13). இந்த பட்டணத்தார் ஓரினச்சேர்க்கையாளாராய் இருந்தனர் (ஆதி 19:5: ரோம1:27).

ஆ. **"அவர்களை போல விபச்சாரம் பண்ணி"**- இது யாரை குறிக்கிறது? தூதர்களையா?- தூதர்கள் பணிவிடையின் ஆவிகளாய் இருக்கிறார்கள். (எபி 1:14). தூதர்களில் கணவன் மனைவி என்பது இல்லை (லூக் 20:34-36). ஆகவே இது தூதர்களை குறிக்காது. இது 4வது வசனத்தில் சொல்லப்பட்ட கள்ள போதகர்களை குறிக்கலாம்.

இ. **"அந்நிய மாம்சத்தை தொடர்ந்து"**- இவர்கள் ஓரினச்சேர்க்கையாளர்களாய் இருந்தாலும், தேவதூதர்களுடன் பாலுறவு கொள்ள வெறியுள்ளவர்களாய் இருந்தப்படியால் தேவனால் தண்டிக்கப்பட்டனர். இது நமக்கு எச்சரிக்கையாக இருக்கிறது. கள்ள போதகர்கள் எப்படிப்பட்ட ஆக்கினையடைவர்கள் என்பதற்கு ஒரு மாதிரியாயிருக்கிறது. ( 2பேதுரு 2:6)

## கள்ள போதகர்களை குறித்து விளக்கம் (8-13)

**8. அப்படிப்போலவே, சொப்பனக்காரராகிய இவர்களும் மாம்சத்தை அசுசிப்படுத்திக்கொண்டு, கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணி, மகத்துவங்களைத் தூஷிக்கிறார்கள்.**

. அ. சொப்பனக்காரராகிய இவர்கள் என்ன செய்கிறார்கள்?

1.மாம்சத்தை அசுசிப்படுத்துகிறார்கள்

2. கர்த்ததுவத்தை அசத்தைப்பண்ணுகிறார்கள்

3. மகத்துவங்களை தூசிக்கிறார்கள

ஆ.**"சொப்பனக்காரர்"**- மக்களை ஏமாற்ற, அவர்களை நம்ப வைக்க நீண்டகாலமாய் ஆயுதமாகவும் உள்ளது. (ஏரே23̀16,25 எரே 6:13,14)மாயவித்தைக்காரன் பர்யேசு செய்த செயலை பாருங்கள் (அப்13:6-8).

இ. இன்றும் கூட இதை போல கள்ளப்போதகர்கள் தங்களுடைய யுக சொப்பனத்தால் மக்களை திசைமாற செய்கிறார்கள்.இவர்களை பற்றியே யூதா தொடர்ந்து பேசுகிறார.

**9. பிரதான தூதனாகிய மிகாவேல் மோசேயினுடைய சரீரத்தைக்குறித்துப் பிசாசுடனே தர்க்கித்துப் பேசினபோது, அவனைத் தூ'ணமாய்க் குற்றப்படுத்தத்துணியாமல்: கர்த்தர் உன்னைக் கடிந்து கொள்வாராக என்று சொன்னான்.**

அ.**"மிகாவேல்"**- இந்த தூதனை பற்றி சில வசனங்கள் ஆவியானவர் கொடுத்திருக்கிறார் (வெளி 12:7 தானி 10:13,21).

**10. இவர்கள் தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூரீக்கிறார்கள் புத்தியில்லாத மிருகங்களைப்போல சுபாவப்படி தங்களுக்குத் தெரிந்திருக்கிறவைகளாலே தங்களைக் கெடுத்துக்கொள்ளுகிறார்கள்.**

அ. கள்ள போதகர்கள் தங்களுக்கு தெரியதவைகளை புரட்டி தங்களுக்கு தாங்களே கேடு ஏற்ப்படுத்தி கொள்கிறார்கள். (2 பேது 3:16). தேவன் வேதாகமத்தில் வெளிப்படுத்தாத ஒரு விசே'யத்தை நம்முடைய அறிவினால் புரிந்துக்கொள்ள முடியாது. (1கொரி 4:6).

**11.இவர்களுக்கு ஐயோ! இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து, பிலேயாம் கூலிக்காகச்செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோரா எதிர்த்துப்பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனார்கள்.**

அ. கள்ள போதகர்கள் யாரைப் போல செயல்ப்படுவதாக கூறுகிறார்கள்?

1. காயீன் – அப் 4:1-14
2. பிலேயாம் – வெளி 2:14̀ எண் 31:16
3. கோரா – எண் 16:1-10

**12 இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றிக் கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக்கொள்ளுகிறார்கள் இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ்செத்து வேரற்றுப்போன மரங்களும்,**

**13 தங்கள் அவமானங்களை நுரைதள்ளுகிற அமளியான கடலலைகளும், மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள் இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது.**

அ. இப்படிப்பட்டவர்கள் எங்கேயிருங்கிறார்கள்?

நமக்குள் கூட பந்தியிருந்தவர்கள்,

ஆ. இவர்கள் எதை போல இருக்கிறார்கள்?

1. தண்ணீரற்ற மேகங்கள்

2. இலையுதிர்ந்து, கனியற்று, இரண்டு தரஞ்செத்து வேரற்றுப் போன மரங்கள்.

3. அவமானங்களை நுரை தள்ளுகிற அமளியான கடல் அலைகள்

4. மார்க்கதப்பி அலைகிற நட்சந்திரங்கள்

**14 ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும் இவர்களைக்குறித்து: இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும்,**

**15 தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்று முன்னறிவித்தான்.**

அ. அவபக்தியாய் நடக்கிற, பின்வாங்கி தங்களுடைய வஸ்திரத்தை கரைப்படுத்தினவர்களுக்கு அவர்களுடைய கிரியைகளின் படி நியாயத்தீர்க்க, கண்டிக்க கரத்தர் வருகிறார் (2 தெச 1:7-10 2 பேது 3:10-14)

அ. ஆராதனைக்கு தாமதமாய் வருவது அவபக்தியை காண்பிக்குமா?

ஆ. நம்முடைய தேவைக்காக வசனத்தை மீருவது அவபக்தியா?

இ. மாம்ச இச்சைகளின் படி நடப்பது?

**16. இவர்கள் முறுமுறுக்கிறவர்களும், முறையிடுகிறவர்களும், தங்கள் இச்சைகளின்படி நடக்கிறவர்களுமாயிருக்கிறார்கள் இவர்களுடைய வாய் இறுமாப்பானவைகளைப் பேசும் தற்பொழிவுக்காக முகஸ்துதி செய்வார்கள்.**

அ.**"முறுமுறுக்கிறவர்கள்"**- தேவன் வெறுக்கிற காரியம் ( 1 கொரி 10:10 பிலி2:16)

ஆ. தற்பொழிவை விரும்புவதே தவறான உபதேசங்களுக்கும், கள்ள உபதேசங்களுக்கும் அடிப்படையாயிருக்கிறாதா? ( எசா 29:16 யோவா 5:44 அப் 8:9)

**17. நீங்களோ பிரியமானவர்களே, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலரால் முன் சொல்லப்பட்ட வார்த்தைகளை நினைவுகூருங்கள**.

அ. ஒவ்வொரு கிறிஸ்தவருமே தங்களுடைய வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய காரியங்களை தேவன் அப்போஸ்தலருக்கு வெளிப்படுத்தியிருக்கிற (எபே 3:6, 1 கொரி 2:10, 2 கொரி 2:17). ஆராதனை முறை, இரட்சிப்பு, அன்றாட வாழ்க்கை, தேவனுக்கு பிரியமாயிருப்பது, நம்முடைய வெற்றி இவை அனைத்துமே அப்போஸ்தலர்கள் மூலமாய் நமக்கு அறிவித்திருக்கிறார்.

ஆ. இன்றும் அப்போஸ்தலருடைய உபதேசத்தில் நிலைத்திருக்க வேண்டும் (அப் 2:42). ஒருவர் அப்போஸ்தலருடைய உபதேசத்தை மீறும் போது அவர் தவறு (சிலுவைக்கு பகைஞர்) செய்கிறார் (பிலி 3:17,18). தேவனுக்கு பிரியமாயிருப்பதற்கான வழியை அப்போஸ்தலர்கள் கூறியிருக்கிறார்கள் ( 1 தெச 4:1). இயேசுவின் வார்த்தைகளையே அப்போஸ்தலர்கள் உபதேசங்களாய் இருந்தனர். ஒருவர் அப்போஸ்தலரின் உபதேசத்தை மீறும் போது அவர் இயேசுவின் இயேசுவின் வார்த்தையை மீறுகிறார். இயேசுவின் வார்த்தைகளை நம்மை நியாயத்தீர்க்கும். (யோவா 12:48).

இ. அப்போஸ்தலர்கள் எதை அறிவித்திருக்கிறார்கள்?

தங்களுடைய விருப்பத்தின்படியும், இச்சைகளின் படி செய்கிற கள்ள போதகர்கள் எழும்புவார்கள் எனவும் பரிசேயர்கள் எழும்புவார்கள் எனவும் அறிவித்திருக்கிறார்கள்.

**20. நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி,**

**21. தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்தியஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய இரக்கத்தைப்பெறக் காத்திருங்கள்.**

அ. நாம் செய்ய வேண்டிய சில காரியங்கள் என்ன?

1.**"மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உறுதிப்படுத்த வேண்டும்"**- சபை கிறிஸ்துவின் மீது அஸ்திபாரம் போடப்பட்டுயிருக்கிறது. அதினாலே தான் அது மகா பரிசுத்தமானது (எபே 2:20,21). கிறிஸ்துவுக்குள் அவருடைய போதனையை கேட்டு அவருக்குள் வேருக்கொண்டு விசுவாசத்தில் உறுதிபட வேண்டும். (கொலே 2:6,7). நாம் விசுவாசத்திற்காக போராட வேண்டும். (யுதா 3). அதைவிட்டு வழுவி தேவனுக்கு முன்பு குற்றமுடையவர்களாயிராதபடிக்கு நாம் கவனமாயிருக்க வேண்டும். இஸ்ரவேலரை போல, தள்ளப்பட்ட தூதர்களைபோல, சோதோம் கோமோராவை போல கள்ள போதகர்கள் போலர காயீன், பிலேயாம், கோராவை போல இருக்க கூடாது. நாம் விசுவாசத்தில் உறுதியாய் இருக்க வேண்டும். (எபி 3:14 1 கொரி 16:13 எபி 10:38, 39)

2. **"பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்"** – பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம்பண்ணுகிறார் (அப் 2:38 2 தீமோ 1:14) அவர் கிறிஸ்தவின் வசனத்தின் மூலமாய் நமக்குள் வாசம் பண்ணுவதோடு நமக்கு முத்திரையாயிருக்கிறார் (எபே 1:13,14). கள்ள போதகர்கள் ஆவியில்லாதவர்கள் (1:19) உண்மையான கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணுகிறார். ஆவியானவர் நமக்காக வேண்டுதல் செய்கிறார் (ரோம 8:26,27).

3. **"அன்பினால் காத்துக்கொள்ள வேண்டும்"**- அவருடைய அன்பினாலேயே இப்பொழுது காக்கப்பட்டிருக்கிறோம் (ரோம 5:10 யோவா3:16) அவருடைய அன்பு பெரியது அவருடைய அன்பிலே நிலைத்திருப்பதால் மாத்திரம்தான் நம்மை நாமே காத்துக்கொள்ள முடியும். அதற்கு நாம் அவருடைய கற்பனைகளை கைக்கொள்ள வேண்டும். (யோவா14:21).

4. **"இரக்கத்தை பெற காத்திருங்கள்"**- அவருடைய இரக்கத்தால் இரட்சிக்கப்பட்ட நாம், இயேசுவுக்காக காத்திருக்க வேண்டும். பார்க்கவும் ( 2பேது 3:14 2தெச 1:10 2 தீமோ4:8). அவரும் நமக்காக காத்திருக்கிறார். (ஓசி 3:3 வெளி 19:8 எபி 9:28)

**22. அல்லாமலும், நீங்கள் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து, சிலருக்கு இரக்கம்பாராட்டி, சிலரை அக்கினியிலிருந்து இழுத்துவிட்டு, பயத்தோடே இரட்சித்து,**

அ. எல்லாரும் இரட்சிக்கப்படுவது தேவனுடைய சித்தம் (1 தீமோ 2:4). கள்ள போதகர்களோ, உயர் அதிகாரியோ, அவர்கள் சத்தியத்திற்கு கீழ்படியும் போது அவர்கள் இரட்சிக்கப்படுகிறார்.

1. பவுலை சிந்தித்து பார்க்கவும்

2. யாக் 5:20 பார்க்கவும்

**23. மாம்சத்தால் கறைப்பட்டிருக்கிற வஸ்திரத்தையும் வெறுத்துத் தள்ளுங்கள்.**

அ. நம்முடைய வெண்வஸ்திரத்தை காப்பற்றுவது மாத்திரமல்ல கறைப்பட்டிருக்கிற வஸ்திரத்தை வெறுத்து தள்ள வேண்டும் (கொலே 3:5-10)

**24.வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும்,**

**25.தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென்.**

**ஆமென்.**